மொடக்குறிச்சி வட்டாரம், தலைவர் அவர்கள்/ 46புதூர் ஊராட்சி
அவர்களின் நடவடிக்கைகள்

நாள்:13.02.2024

ந.க.எண்:13/2023-2024

| | | |
|---|---|---|
| பொருள்: | | மனைப்பிரிவு - ஈரேடு மாவட்டம் - மொடக்குறிச்சி வட்டாரம் - 46புதூர் ஊராட்சி மற்றும் கிராமம் ரீ.ச.எண்:476/1A 1.40ஏக்கர்(5673ச.மீ) பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது - இறுதி உத்தரவு வழங்குதல் - சார்பாக. |
| பார்வை: | | 1. இவ்வலுக தீர்மான எண்: 358 , நாள்:25.08.2023<br>2. மனுதாரர். D.சிவலிங்கம்(ம)G.கபிலன் என்பவரது விண்ணப்பநாள்:16.03.2023<br>3. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.தி.(1) துறை , நாள்:04.02.2019<br>4. ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம், தீர்மான எண்.26/2021 நாள்:14.09.2021<br>5. நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7362/19/1 A-2, நாள்:22.05.2019<br>6. உறுப்பினர் செயலர் (பொ), ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் ந.க.எண்.473/2021 ஈ.மா-3 நாள்:14.09.2021 |

உத்திரவு:

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம்,46புதூர் ஊராட்சி மற்றும் 46புதூர் கிராமம் ரீ.ச.எண்.476/1A 1.40ஏக்கர்(5673.00ச.மீட்டர் நிலப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி எண்.169/2023 என எண்ணிடப்பட்டு உறுப்பினர்செயலர்(பொ) ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் பின்வருமாறு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடுகள் விபரம் | | |
|---|---|---|
| 1. | மனைப்பிரிவின் அமைவிடம் | ஈரோடு மாவட்டம்,மொடக்குறிச்சி வட்டாரம் ,46புதூர் ஊராட்சி |
| 2. | ரீ.சர்வே எண். | 476/1A |
| 3. | தொழில்நுட்ப அனுமதி வரைபடம் எண் | 169/2023 |
| 4. | கோப்பு எண்/நாள். | PXC08CTN/2022/TCP நாள்:16.03.2023 |
| 5. | மனைப்பிரிவின் பரப்பளவு | 1.40ஏக்கர்(5673.00ச.மீட்டர் |
| 6. | கோரிய மனையிடங்கள் | 24 |
| 7. | ஒதுக்கீடு செய்யப்பட்டவை | 24 |
| 8. | மனைப்பிரிவு சாலையின் பரப்பு மற்றும் மூலை முடுக்கு (மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது) | 1681.81ச.மீ |
| 9. | பூங்கா/திறந்த வெளி இடம் | ஒதுக்கீடு இல்லை. 399.11 ச.மீக்கான (guideline value) |

| | | |
|---|---|---|
| 10. | | (உத்தேச மனைப்பரப்பு + எதிர்கால உபயோகத்தின் பரப்பு) அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை உரிய கணக்கீட்டு தலைப்பில் மனுதாரால் செலுத்தப்பட்டுள்ளது) |
| 10. | TANGEDCO | 2482 |
| 11. | நிபந்தனைகள் வரிசை எண்.17-ஐ பூர்த்தி செய்த விபரம் | பார்வை 5-ல் காணும் இம்மனைப்பிரிவு ஒப்புதல் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் குறித்து 46புதூர் ஊராட்சி தலைவர் ஒப்புதல் பத்திரம் தயார் செய்து தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒப்பந்தப்பத்திரம் எண்.‌.3291 நாள்:15.04.2023-ன் படி பதிவு செய்து அசல் பத்திரத்தினை ஒப்படைத்தள்ளார். |

அவல்பூந்துறை சார்பதிவாளர் அலுவலக தான சாசன ஆவண எண்.3291 நாள்:15.04.2023 கழிவுநீர் வாய்க்கால் 1.40ஏக்கர்(5673.00ச.மீட்டர் கொண்ட சாலைகளும் மற்றும் மூலைமுடுக்குகளும் 2.25ச.மீட்டர் இடம் முழுவதும் 46புதூர் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்துள்ளார். மேலும் உள்ளாட்சிக்கு செலுத்த வேண்டிய ரூ.1000/-ஐ 46புதூர் ஊராட்சி பல்வகை இரசீது எண்: 10443 நாள்: 14.09.2023 ன் படி செலுத்தியுள்ளார்.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம் 46புதூர் ஊராட்சியில் ரீ.ச.எண். 476/1A, 1.40ஏக்கர்(5673.00ச.மீட்டர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனை பிரிவிற்கு திட்ட அனுமதிஎண்:169/2023 என எண்ணிட்டப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள உத்தேச குடியிருப்பு மனைபிரிவுக்களுக்கு பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி வரைபடம் அங்கீகரித்து உத்திரவிடப்படுகிறது. இந்த மனைபிரிவிற்கு "ஸ்ரீ பாலாஜி கார்டன்" என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்:

1. பார்வை 5-ல் காணும் உறுப்பினர் செயலர்(பொ) ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் உத்தரவில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் 1, 2 மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் 1முதல் 23 முடிய நிபந்தனைகளை முழுமையாக கடைபிடிக்க வேண்டும். இந்நிபந்தனைகள் மீறப்பட்டதாக தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி இந்த உத்தரவு இரத்து செய்யப்படும்.

2. இந்த மனைப்பிரிவு ஒப்புதலுக்காக மனுதாரர் சமர்பித்த ஆவணங்கள் ,சான்றுகள் ஆகியவை தவறு என்றோ, போலியானது என்றோ அறியப்பட்டலோ அல்லது இம்மனைபிரிவிற்கு வழங்கிய ஒப்புதலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இந்த ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பு மின்றி இரத்து செய்யப்படும்.

3. விற்பனைக்குரிய மனையிடங்களை விற்பனை செய்யும் பொழுது இவ்வாணையின் நகலோடு உறுப்பினர் செயலர் (பொ),ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களால் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

4. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனைநில அளவுகளின் விவரங்களை உறுப்பினர் செயலர் (பொ),ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களால் அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.

5. பத்திர பதிவு மற்றும் நில உடைமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழுப்பொறுப்பாவார்.

6. திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் குறுக்கே அல்லது நிலத்தின் முன்புறமாக மனுதாரரால் மற்றும் மின்வாரியத்தினரால் விற்பனை செய்யப்படவுள்ள மனை நிலங்களுக்காக உயர் அழுத்த / சாதாரண மின்அழுத்த மின்சார லைன்கள், மின் டிரான்ஸ்பார்ம்கள் அமைத்து மின்சார வசதிகள் செய்து கொள்ள அனுமதி இல்லை. வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு மனையின் ஊடே செல்லும் உயர் அழுத்த மின்பாதையை மனுதாரர் தமது சொந்த செலவில் மனைபிரிவு சாலைக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

7. உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் வழியாக மட்டும் ஒரே சீராக மின்கம்பங்கள் அமைத்து மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். zig-zag ஆக மின்கம்பங்கள் அமைக்க கூடாது.

8. குறைந்த வருவாய்க்கான மனைகளை மனை உட்பிரிவு மனை ஒருங்கிணைப்பு செய்யக்கூடாது.

9. இந்த வரன்முறைக்காக மனுதாரர் செலுத்திய கட்டணங்களில் ஏதேனும் குறைவு என பின்னர் ஆய்வு/தணிக்கையில் தெரிய வந்தால் நிலுவைத் தொகையினை மனுதாரர் முழுமையாக செலுத்த வேண்டும்.

10. வரன்முறை செய்யப்படும் மனையிடத்தினை அதற்கென ஒதுக்கப்பட்ட குடியிருப்பு/வணிக பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் பயன்படுத்தி அனுமதி இல்லை.

11. அரசின் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் மனுதாரர் கட்டுப்பட்டவராவர்.

மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்ய ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்,
46புதூர் ஊராட்சி

தலைவர்,
46புதூர் ஊராட்சி.

**பெறுதல்:**
திரு.D.சிவலிங்கம்(ம)G.கபிலன்
கதவுஎண்:L-394,பெரியார் நகர்
ஈரோடு தாலூக்கா
ஈரோடு மாவட்டம்.

**நகல்:** உறுப்பினர் செயலர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களுக்குப் பணிந்தனுப்படுகிறது.
**நகல்:** ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) , ஈரோடு அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.
**நகல்:** சார்பதிவாளர் அலுவலகம், அவல்பூந்துறை
**நகல்:** ஆ2 பிரிவு இருப்புக்கோப்பு